2933

# சீனாவைப்பார்

அணா
2

ப. ஜீவானந்தன்

PRESENTED BY:
V. PR. PL. M.
[illegible] CHETTIAR
PAGA[illegible]

ஜன சேவா மலர்.

# சிலுவைப்பார்


ஆசிரியர்:
ப. ஜீவானந்தன்.

பிரசுரித்தவர்:
து. லா. சசிவர்ணம்,
மதுரை.

# சமர்ப்பணம்

ஏகாதிபத்திய -

- எதிரிகளுக்கு



ப. ஜீவானந்தன்.

# முன்னுரை.

உலகத்தின் கண்களையும் கருத்தையும் இன்று சீன தேசம் கவர்ந்து நிற்கிறது. சீன நாட்டின் சுதந்திராவேசமும் ஜப்பான் தேசத்தின் பாஸிஸ ஆக்கிரமிப்பு வெறியும் அங்கு முட்டிமோதிக் கொண்டிருக்கின்றன. ஏகாதிபத்திய நாடுகள், திரைமறைவிலும் பகிரங்கத்திலும் ஜப்பானைத் தழுவி நிற்பதும், ஜனநாயகத்தையும் முற்போக்கையும் விரும்பும் தேசங்களும், கட்சிகளும் ஸ்தாபனங்களும், தனிநபர்களும் சீனாவுக்கு அனுதாபம் காட்டுகிறதும் உதவிபுரிகிறதும் உலகப்பிரசித்தம். நேற்று நாமும் இந்நாடு முழுவதும் "சீன தினம்" கொண்டாடி, சீனர்களின் வெற்றிக்குத் துணைதேடவில்லையா?

1894 லிலிருந்து பிடிக்கும்போதெல்லாம் ஜப்பானுக்குப் பெண்டாகியே வந்திருக்கும் வாடிக்கையின் வசப்பட்டுக் கிடந்த சீனம், இன்று, ஸ்ரீமதி ஷாங்கெய் ஷெக் வீரகர்ஜனை புரிந்ததுபோல், "கடைசிச் சீனனின் கடைசி மூச்சு உள்ள வரையில் ஜப்பானுக்குப் பணியப்போவதில்லை" யென்று நிமிர்ந்து நின்று மரணத்தைத் திரணமாக மதித்துப் போராடுவானேன்? டாக்டர் சன் யாட் சென் கூறியது போல் "பொருளாதாரத் துறையில் உலக வல்லரசுகளுக்கெல்லாம் குடியேற்ற நாடாகி"ச் சீர்குலைந்து கிடந்த சீனம், ஆயிரமாயிரமாக அருமந்த குழந்தைகளைப் பலியிட்டுங்கூட, சுய நிர்ணய உரிமையை ஸ்தாபிப்பேனென்று வெகு தீவிரமாக முனைந்து போராடும் ஆண்மைக்குக் காரணமென்ன? "உருளுக தலைகள் மானம் ஓங்குக" என்றபடி சோதாக்களாயிருந்த சீனர்கள் ஜப்பானியஏகாதிபத்யத்தின் அட்டூழியங்களைச் சுட்டெரிக்கும் வண்ணம் துள்ளி யெழும்படி தூண்டி நிற்கும் சக்தி எது? அதுதான், சீனத்தில் சில

வருடங்களாக, கோ மிங் டாங் என்னும் தேசீய சர்க்காருடைய கொடூரமான அடக்கு முறைக்கு எதிரேயும், கம்யூனிஸ்ட் கட்சியின் இடையராத உழைப்பால் வன்மையாகக் கட்டப்பட்டு வந்திருக்கும் தேசவிடுதலை ஐக்ய முன்னணியின் ஜப்பானிய-ஏகாதிபத்ய-விரோத சக்தி.

இப் புஸ்தகத்தில் காணப்படும் அறிக்கைகளும், கடிதங்களும், கட்டுரைகளும், முறையீடுகளேயும், சீனுவில் ஜப்பானிய ஏகாதிபத்ய எதிர்ப்பு ஐக்ய முன்னணி எவ்வாறு தயாரிக்கப்பட்டதென்பதையும், அதன் அவசியத்தையும், பலத்தையும் ஒருவாறு விளக்கிக்காட்டுமென்றே நினைக்கிறேன். பிரிட்டீஷ் ஏகாதிபத்ய எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழர்களுக்கு, இப்புத்தகத்தை வாசிப்பதின் மூலம், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் சரியான மார்க்கம் தென்படக்கூடுமென்பதே எனது தீர்மானம்.

ஜப்பானிய ஏகாதி பத்திய எதிர்ப்புப் போராட்டத்திற்கு, சீனப் பொதுஜனங்கள் ஸ்தாபன ரீதியாக, கட்டுத்திட்டத்தோடு தயாராகி வந்ததை உலகமுழுவதும் அறியும்படி செய்வதற்காக, "சீனுவின் குரலொலி" (Voice of China) என்றொரு மாதம் இருமுறை ஆங்கில பத்திரிகை ஷாங்கையில் 1936-ல் ஆரம்பிக்கப்பட்டது. அதில், வந்துள்ள சில கட்டுரைகளின் மொழி பெயர்ப்புத் தொகுதியே இப்புத்தகம்.

இறுதியாக ஒரு வார்த்தை. இப்புத்தகம் ஒரு தமிழனையாவது விஞ்ஞானரீதியாக போராடும் ஏகாதிபத்தியஎதிர்ப்பு வீரனுகச்செய்யுமானல், அதுவே, இப்புத்தகத்தை எழுதியதற்குப் போதிய கைம்மாருகுமென்று திருப்தியடைவேன்.

முகாம்...திண்டுக்கல்
10—1—38.

ப. ஜீவானந்தன்.

# சீனாவைப் பார்.

## விடுதலை முன்னணி.

[ஷாங்கையில் வசிக்கும் 35 லட்சம் ஜனங்களின் சார்பாக, ஷாங்கை தேசவிடுதலைச் சங்கத்தார் வெளியிட்ட வேண்டுகோள்.]

விடுதலை முன்னணியின் நோக்கம்.................... ஒன்றுபட்டு, விரோதியை எதிர்ப்பதுதான். இன்னும் விளங்கக் கூறினால், விடுதலை முன்னணியின் நோக்கம், சகல கட்சிகளையும் கோஷ்டிகளையும், தேசத்திலுள்ள எல்லா வர்க்கத்தாரையும், ஒருமுகமாக்கிஜப்பானியஎகாதிபத்தியத்தையும் துரோகிகளையும் எதிர்ப்பதுதான். இந்த விடுதலை முன்னணி, ஒருநாளும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முயலாது. நாட்டிலுள்ள பல திறப்பட்ட கட்சிகள் கோஷ்டிகள் இவைகளிடையில் நிலவும் அரசியல் தகராறுகளையெல்லாம் ஒழித்து, பொது ஜனங்களின் உண்மையான ஒற்றுமை சக்தியைத் திரட்டுவதற்காகவே இது முயலும். இவ்வாறு செய்வதால், எதிரியை எதிர்க்கவும், தேசத்தை ரக்ஷிக்கவும் போதுமான சக்திகொண்ட ஓர் ஐக்ய அரசியல் அதிகாரத்தை ஸ்தாபிப்பது சாத்தியப்படும். கெடுபிடியான தேசிய நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், ஜப்பானிய ஏகாதிபத்யம் நீங்கலாக, மற்ற தேசங்களை எல்லாம் நமது நேசதேசங்களாகவே பாவித்துத் தீரவேண்டும். இதுபோல், உள் நாட்டிலும், துரோகிகள் நீங்கலாக, ஏனைய

ஒன்றுக்கொன்று எதிர்க்கும் கட்சிகள், கோஷ்டிகள் யாவரையும் நமது நண்பர்களாகவே மதித்துத் தீரவேண்டும். "நீர்ப்பறவைக்கும் நிலப்பறவைக்கும் நடந்த சண்டையால் மீன் பிடிப்போன் லாபமடைந்த கதைபோல" சென்ற காலத்தில் நிகழ்ந்த துயரம் நிறைந்த அனுபவங்களையெல்லாம் பார்த்திருக்கிறோம். இனிமேல் ஒரு உண்மையை எல்லோரும் உணரவேண்டுமென்று விரும்புகிறோம். அந்த உண்மை, "வீட்டுச் சுவரின் உட்புறத்தில் சகோதரர்கள் சண்டை அடித்துக்கொண்டிருந்தால், வாசலில் வந்து நிற்கும் எதிரியை யார் எதிர்ப்பது? என்பதுதான்.

இந்தவருஷம், ஜூன் மீ 1உ வெளியிட்ட அறிக்கையில், நாங்கள் மீனப்பூர்வமாகக் குறிப்பிட்டிருப்பதாவது......... "விடுதலை முன்னணி, ஸ்தல அதிகாரிகளுடன், நேர்மையாக கடிதப்போக்குவரவு வைத்துக்கொள்ளத் தயாராயிருக்கிறது...............தகுந்த எல்லைக்குள் எங்களுடைய தேச விடுதலை இயக்கத்தைக்கொண்டு செலுத்த அனுமதிக்கும் எந்த ஸ்தல அதிகாரிகளுடனும் நாங்கள் நேர்மையாக ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறோம். சமரசப்பேச்சுகளின் முடிவுப்படி, கவனத்துடன், பொதுஜனங்கள் கட்டுப்பட்டு நடப்பார்களென்று, நாங்கள் மனப்பூர்வமாகப் பொறுப்புக் கூறுகிறோம்."

"இந்த அறிக்கையானது மிகுந்த நன்னம்பிக்கையுடன் வெளியிடப்பட்டதென்பதை நிரூபிக்கப் பல சான்றுகள் இருக்கின்றன. இந்நகரத்தில், அதிகாரிகளுக்குத் தப்பபிப்பிராயத்தை உண்டுபண்ணத்தக்க சுலோகங்களைத்

தடுக்கவும், அதிகாரிகளின் எதிர்ப்பை உண்டாக்கத் தகுந்த நடைமுறைகளை விலக்கவும், நாங்கள் முயற்சித்து வந்திருக்கிறோம்..............இதற்குள், தேச விடுதலை முன்னணியானது உண்மையும் நேர்மையுங்கொண்டதென்பதை சமூகம் நன்றாகத் தெரிந்துகொண்டது. எதற்காக நாங்கள் எங்களுடைய ஆசாபாசங்களை அடக்கவேண்டுமென்று பெரு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கின்றோமென்றால், ஏறத்தாழ எங்கள்மீது துவேஷம்கொண்டிருக்கும் எங்களுடைய அதிகாரிகள், எங்களை நல்லவண்ணம் தெரிந்துகொள்ளவேண்டுமென்று நாங்கள் ஆசைப்படுகிறோம்......

ஆனால், தேச விடுதலை முன்னணி, எவ்வளவு உண்மையாக நடந்துகொண்டபோதிலுங்கூட, இந்நகரில் விடுதலை இயக்கம் கொடுமையான அடக்குமுறைக்கு ஆளாவது மட்டும் நின்றபாடில்லை...........இன்றுவரையில், கைதி செய்யப்பட்டவர்களில் எல்லோரும் இன்னும் விடுவிக்கப்படவில்லையென்பதோடு, மேற்கொண்டும் கைதிசெய்வது தொடர்ச்சியாக நடந்துகொண்டேயிருக்கிறது. அடக்குமுறைப் பிரயோகம், தேச விடுதலை முன்னணியோடு அடங்கிவிடவில்லை; ஏனைய தேசாபிமான இயக்கங்கள்மீதும் தாவிச் செல்கின்றது.

எதிரியினுடைய பாதுகாப்பு எல்லையினுள் போய்விட்ட ஹாங்கியூ ஜில்லாவில் மாத்திரம், ஷாங்கையிலுள்ள 200000 க்கு மேற்பட்ட யந்திரத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இந்த 200000 ஜனங்களுக்கும் ஸ்தாபன ரீதியான பயிற்சி உண்டு. அவர்கள் தைரியமும் உற்சாகமும் உடையவர்கள்,

அவர்களைத் தகுந்தபடி பயிற்சி செய்திருந்தால், ஒவ்வொருவரும் போர்முனையில் முன்வரிசையில் மகாவீரர்களாக விளங்கியிருந்திருப்பார்கள். ஆனால் அதிகாரிகளோ தாங்களும் அவர்களை ஸ்தாபன ரீதியாகச் செய்யவில்லை; எங்களையும் அவர்களுக்காக ஸ்தாபனம் நிறுவ அனுமதிக்கவில்லை. இந்த 200000 பேர்களையும் எதிரிகளின் தயவில் குடியிருக்க விட்டுவிடுவதையே அதிகாரிகள் உசிதமென்று கருதினர். தொழிலாளர்களிடையில் துரோகிகள் வேலை செய்வதற்கு அனுமதி தந்த அதிகாரிகள், தேச விடுதலை முன்னணியில் தொழிலாளர்கள் பங்கெடுத்துக்கொள்வதை முழுமூச்சுடன் நசுக்கினார்கள். இது தேசத்தின் நன்மைக்காகவா, அல்லது எதிரிகளின் நன்மைக்காகவா?

...........ஆபத்து அளவு கடந்துவிட்டது! நாங்கள் கண்ணீருடன் முறையிடுகிறோம். நகர அதிகாரிகளும், மத்திய சர்க்காரும் எங்கள் பேச்சுக்குச் செவிசாய்த்து, எங்களைத் தெரிந்துகொள்ளும்படி வேண்டிக்கொள்கிறோம். தேசத்தின் விடுதலைக்கான சரியான பாதையைத் தாங்களே தீர்மானித்துக்கொள்ளவேண்டுமென்று தேச மகாஜனங்கள் யாவரையும் கேட்டுக்கொள்கிறோம். ஷாங்கையில் வாழும் 35 லட்சம் பேர்களின் சார்பாக இந்த வேண்டுகோளை விடுக்கிறோம்".

# விவசாயிகளுடன் பேச்சு.

---

[பேய்ப்பிங்கிலுள்ள யென்சிங் மாணவர் சுயாட்சி சங்கத்தார் வெளியிட்ட அறிக்கை.]

"கிராமங்களில் பிரசாரத்தை முடித்துவிட்டு, நாங்கள் திரும்பிவந்திருக்கிறோம். எங்களுடைய 12 நாள் பிரயாணத்தில், நாங்கள் புத்தறிவும் புதிய அனுபவங்களும் அடைந்திருக்கிறோம்.................நேரடியான அனுபவங்களிலிருந்து, சீன விவசாயிகள், நாம் நினைப்பதுபோல், மூடர்களல்லவென்றும், அவர்கள் முறுக்கேறிய தேசபக்தியும் ரத்தக்கொதிப்பும் உடையவர்களென்றும் நாங்கள் கண்டோம். அவர்கள் ஜப்பானையும் ஜப்பானியர்களுக்கு வால் பிடித்துத்திரியும் துஷ்ட நாய்களாகிய துரோகிகளையும் வெறுக்கிறார்கள். ஆனால், பொருளாதாரத் துறையில் அவர்கள் மிகுதியும் நசுக்குண்டு கிடப்பதால், சுதந்திரப் போராட்டத்திற்குச் சிறிதுதான் உதவிசெய்ய முடிகிறது. ......................விவசாயிகள் கொடூரமான பட்டினியால் வாடுகிறார்கள். அவர்கள் உயிரோடிருக்க விரும்புகிறார்கள். உண்ண உணவு வேண்டுமென்கிறார்கள். தாங்கமுடியாத வரிச்சுமையோடு, நாட்டுப்புறக்கடனும் குரூரச் சுரண்டலும் சேர்ந்துகொண்டு, அவர்களை வாழவிடாது வதைக்கின்றன. ஜீவிதமுழுதும் அவர்கள் பாடுபட்டிருக்கிறார்கள். இப்பாலும், வாழுவதற்கு ஆசைப்படுகிறார்கள். ஆனால் காலந்தள்ள அவர்களுக்கு வழியொன்றும்

கிட்டவில்லை. ஜீவிப்பதற்கு அவர்களுக்கு ஒரு வழி காட்டும் பொருட்டு நாங்கள் அவர்களோடு இருக்கவேண்டு மென்று, அழுத கண்ணோடும் சிந்திய மூக்கோடும் அவர்கள் எங்களைக் கெஞ்சிக்கேட்டார்கள்.................

இவர்களில், படை வீரர்கள் தான் ரொம்பவும் கவலையில் ஆழ்கிருர்கள். அவர்களில் ஒரு பகுதியார் மஞ்சூரியாவின் சுதேசிகள்; ஒரு காலத்தில் ஜப்பானை யெதிர்த்துப் போராடியவர்கள். அவர்களுடைய பெருமை வாய்ந்த சரித்திரம், அவர்களின் மேலதிகாரிகளால் பேரம்பேசப்பட்டிருக்கிறது.

...........................ஆதிக்க வெறியர்களாலும் அவர்களுடைய கையாட்களாலும் பொதுஜனங்கள் நேரடியான அடக்கு முறைக்கு இரையாவதை நாங்கள் பிரத்தியட்சமாகப் பார்த்தோம். எங்கு நோக்கினும், துவேஷம் பொதுஜனங்களின் மனதில் ஆழமாகச் செதுக்கப் பட்டிருந்தது. அவர்கள் எங்களோடு நடத்திய சம்பாஷணை கள் இவ்வுண்மையை வெளிக்காட்டின...............ஆளும் வர்க்கத்தாரின் துரோகத்தன்மையைப்பற்றி நாங்கள் வெகு வாகத் தெரிந்துகொண்டோம்.

"நாங்கள் சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பிய பொழுது ஒரு முக்கிய விஷயம் எங்களைச் சஞ்சலப்படுத் திற்று. தற்கால நடவடிக்கைகளைப்பற்றி நாங்கள் அவர்களுக்கு விளக்கியிருந்தோம். எதிரிகளை எதிர்த்துப் போராடித் தீரவேண்டுமென்று அவர்கள் உணர்கிருர்கள். ஆனல் அவர்கள், "நாங்கள் என்ன செய்வோம்? அதை எப்படிச்செய்வோம்!" என்று கேட்டார்கள். "ஒன்ருகச் சேர்ந்து சங்கங்களை அமையுங்கள் இல்லாவிட்டால், நம்மால் ஒரு அடிகூட முன்னேறமுடியாது." என்றுதான் எங்களால் பதில் சொல்லமுடிந்தது. ஆனல், அப்பொழு தும் அவர்களுக்கு எங்களால் அதிக உதவி புரியமுடியா தென்றே உணர்ந்தோம்."

# பழைய ஆசிரியர்.

[மிஸ்டர். மா-ஸியாங்-பே என்பவர் ஓர் பழைய ஆசிரியர். அவருக்கு வயது 96. அவர், புட்டான் சர்வ கலா சாலையிலுள்ள மாணவர் சங்கத்திற்கு ஓர் கடிதம் கீழ்வருமாறு எழுதியுள்ளார்.]

**அன்புள்ள மாணுக்கர்களே!**

தேசத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் போக்கும் பொருட்டு, நீங்கள் பல நாட்களாக தீவிரமாக உழைத்து வருவதை அறிந்து நான் குதூகலமடைகிறேன். நீங்கள் அடமழைக்கும் குளிர் காற்றுக்கும் அஞ்சாமல் உழைக்கிறீர்கள்; ராத்திரி தூக்கத்தை அநேகமாக மறந்து விட்டீர்கள்..................ஆனால், நான்கிங் செல்வது அனுவசியம் சர்க்காரிடம் முறையிடுவதைவிட அப்பட்டமான உண்மைகளையும் யதார்த்தமான விஷயங்களையும் பொதுஜனங்களிடம் தெரிவிப்பது உத்தமம். பொதுஜனங்கள் தங்களுடைய மகத்தான சக்தியையும் பொறுப்பையும் உணரும்படியாக நீங்கள் அவசியம் செய்யவேண்டும். அவர்கள் ஓர் போராட்டத்திற்குத் தயாராகி, எதிரியை எதிர்த்து முறியடிக்கும் பொருட்டு, போர் முனைக்குத் "திமுதிமென்று" பாய்ந்து வரட்டும். நான் கிழவனுகிப் பலவீனமடைந்து விட்டேன். ஆகவே, உங்களுடைய இந்த வீர தீரச் செய்கையில் என்னுல் பங்கெடுத்துக்கொள்ள இயலாது. உங்களுக்கு இந்த வார்த்தைகளை எழுத மாத்திரமே முடியும். தேசத்தின் அபிவிருத்திக்கும் முற்போக்குக்கும் நீங்கள் தொடுத்துள்ள போராட்டம் வெற்றியடையுமென்று நம்புகிறேன்.

# தேசபக்த யுவதி.

---

[இந்தக் கட்டுரை எழுதியவர் ஓர் சின வாலிபப் பெண். கல்லூரி மாணவி. "வாய்ஸ் ஆப் சைனு" என்ற பத்திரிகையில் தனது அபிப்பிராயங்களை எழுதியுள்ளார்.]

இன்றையச் சீனுவின் ஓர் வாலிபப் பெண் நான். நான் எழுதும் எழுத்துக்கள் சீனுவினுடைய வாலிபத்தலைமுறையின்—சிறப்பாக சில மாணவிகளின், கருத்துக்கள், மனோபாவங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றைக் குறிப்பதாக இருக்குமென்றே நினைக்கிறேன்.

பெண் ஆண் என்ற பாகுபாடின்றி இந்நாட்டு வாலிபர்கள் ஒரே விதியை—அடிமைகளாகிக்கொண்டிருக்கும் விதியை எதிர்நோக்கி நிற்கிறுர்கள். எங்களுக்கு ஒரு விஷயம் மட்டும் பட்டவர்த்தனமாகப்படுகிறது. அதாவது, நாம் ஜப்பானை எதிர்த்து நிற்காவிட்டால் நாடு முழுதும் அதன் கைகளில் விழுந்துவிடுமென்பதுதான்.

சுதந்திரத்திற்காகவும் நீதிக்காகவும் என்ன நஷ்டப்பட்டபோதிலும், எவ்விதக் கஷ்டப்பட்டபோதிலும் தங்களுடைய எதிரிகளை வன்மையாகவும் மும்முரமாகவும் எதிர்ப்பது என்கிற தீர்க்கமான முடிவுக்கு, தைரியசாலிகளான சீன தேசத்து இளைஞர்கள் வந்துவிட்டார்கள். தேச விடுதலைக்காக நாங்கள் போராட விரும்பினுல், எங்கள்மீது குற்றம் சுமத்தப்படுமென்பதை நாங்கள் அறிவோம். எங்களு

டைய ஆருயிர்த் தோழர்கள் அடிமைகளாக இருக்க ஒருப்படாத குற்றத்திற்காக தமது சொந்த ஜனங்களாலேயே சிறையிலடைக்கப்பட்டதையும், கொல்லப்பட்டதையும் நாங்கள் கண் கூடாகப் பார்த்திருக்கிறோம். இவற்றிற்கெல்லாம் நாங்கள் கொஞ்சமும் அஞ்சவில்லை. தேச விடுதலைப் போராட்டத்தில் நாம் கஷ்டப்பட்டேயாகவேண்டும்; உயிரைக்கூட தியாகம் செய்துதீரவேண்டும். இதற்கு முன்னால் அநேகர் தங்களுடைய ரத்தத்தைச் சிந்தினார்கள். ஆனால் சுதந்திரத்திற்காகக் கொடுக்க வேண்டிய விலையில் இதுகூட அவ்வளவு உயர்ந்த விலையல்ல. இன்று அமுக்கி அழுத்தி நசுக்கப்படுகிற பொது ஜனங்களுக்குத்தான் கடைசியில் வெற்றியென்பது நிச்சயம்.

உண்மையைக்கூறுமிடத்து, மேற்கூறிய அபிப்பிராயங்கள் நம்முடைய பெற்றோர்களாலும் தலைவர்களெனப்படுகிற சிலராலும் வரவேற்கப்படுகிறதில்லை. வாலிபர்களின் தலைவர்களென்பவர்களில் முக்காலே மூன்று வீசம்பேர் வாலிபர்களுக்கே துரோகம் செய்கிறார்கள். அரசியல விவகாரங்களில் யுவர்களும் யுவதிகளும் தலையிடக்கூடாதென்று அவர்கள் புத்திமதி சொல்கிறார்கள். ஆஷாடபூதிகளான சில தலைவர்கள், வாலிபர்களிடம் அனுதாபமிருப்பதாக வெளி வேஷம் போடுகிறார்கள். ஆனால் உண்மையில் இவர்கள் அந்த வாலிபர்களை கைதிசெய்வதில் போலீஸாரோடு ஒத்துழைக்கிறார்கள். ஒரு சில பெற்றோர்களே, தங்களுடைய புதல்வர்களும் புதல்விகளும் என்னசெய்கிறார்களென்பதை அறிவார்கள். தேச விடுதலைக்காகப் போராடுவது, தங்களுடைய பிள்ளைகளுக்கு பேராபத்தாகுமென்று

அவர்கள் பீதியடைகிருர்கள். அத்தகைய தலைவர்களுடையவும் பெற்ருேர்களுடையவும் வார்த்தைகளுக்கு வாலிபர்கள் செவிசாய்க்கக்கூடாது. எங்களுக்கு எங்களுடைய பாதைதெரியும். லக்ஷியத்தையடையும் வரையில் விட்டுக் கொடாது இடையருது நாங்கள் போராடுவோம். மெய்யாகவே, படிப்பு முக்கியமான விஷயந்தான். ஆனல் படிப்பை விட முக்கிய விஷயம் வேருென்றிருக்கிறது. எங்களுடைய உயிரை நாங்கள் நேசிக்கிருேம். ஆயினும் அநேகர் எதிர் காலத்தில் சந்தோஷத்தோடும் கௌரவத்தோடும் வாழும்பொருட்டு எங்களுடைய அருமையான உயிரையும் நாங்கள் தியாகம் செய்யத் தயாராயிருக்கிருேம்.

எங்களில் பலர்க்கு குறுகிய தேசியததில் (narrow nationalism) நம்பிக்கையில்லை. நாங்கள், ஜப்பானிய ராணுவ அதிகார வெறியர்களை வெறுக்கிருேம். ஆனல், ஜப்பானியப் பொதுஜனங்களிடம் நேசப்பான்மையே கொண்டுள்ளோம். அங்குள்ள பொதுஜனங்கள் நம்மவர்களைப்போல் கஷ்ட நிஷ்டூரங்களுக்கு இரையாவதுடன் அதிகார வர்க்கத்தினரால தவருனபாதையிலும் நடத்திச் செல்லப்படுகிருர்கள். உலகத்தில், இன்னும் யுத்தம் இருந்துகொண்டிருப்பதுமனித வர்க்கத்திற்கே மானக்கேடு. மஞ்சூரியைப் பிததால் ஆக்ரமிப்புக்காக நடைபெறும். யுத்தங்களை நாங்கள் வெறுக்கிருேம்- ஆனல், காட்டுமிராண்டித்தனமான ஏகாதிபத்யத்தை எதிர்க்கும் யுத்தத்தை நாங்கள் பிரசாரம் செய்கிருேம். சிறந்த, சுபீட்சம் நிறைந்த ஓர் உலகத்துக்காகப் போராட வேண்டியது மனிதனுடைய கடமை.

எங்களுடைய சொந்த ஜீவிதத்தைப்பற்றி நாங்கள் அதிகமாகக் கவலைப்படவில்லை. நாம் பிறந்த மண்ணில், ஜப்பானியத் துருப்புகளும் ஜப்பானிய ஆதிக்கமும் இருக்கும்வரையில் உண்மையான சந்தோஷம் நமக்குக் கிட்டாது. க்ஷேமலாபங்களையும், கீர்த்தி கித்தாப்புகளையும் லட்சியமாகக்கொண்டு நாங்கள் பாடுபடவில்லை. அடிமைகளுக்கு இவைகளால் பெருமையுண்டா?

* "நின்னருள் பெற்றிலாதார்
நிகரில்லாச் செல்வரேனும்
பன்னரும் கல்வி கேள்வி
படைத்துயர்ந்திட்டாரேனும்
பின்னரும் எண்ணிலாத
பெருமையிற் சிறந்தாரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்
அணிகள்வேய் பிணத்தோடொப்பார்"

தேச விடுதலை இயக்கமன்னியில், சீன தேசத்து வாலிபர்கள் தங்களுக்காக மாத்திரம் தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்னைகள், இன்னும் சில இருக்கின்றன. இன்று, தொழிலாளிகளாயிருந்தாலும் அல்லது படித்த வாலிபர்களாயிருந்தாலும், எத்தகைய வித்தியாசமுமின்றி, வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஆளாயிருக்கிறார்கள். அதிர்ஷ்டச் சக்கரத்தின் வசப்பட்ட சிலர்க்கு ஜோலி கிடைக்க முடிகிறதாயினும் கிடைத்த பதவியும் அதிருப்திக்குரியதாகவே இருக்கின்றது. பணக் கஷ்டத்தால் சில மாணவர்கள் பள்ளிக்கூடம் செல்வதை நிறுத்தவேண்டி

* பாரதி.

யிருக்கிறது. குடும்ப பிரச்னைகளால் பலர் தொந்தரவடைகிறார்கள். இந்த பிரச்னைகளுக்கெல்லாம் நிவர்த்தி மார்க்கம் வேண்டும். ஆனால் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தினுடையவும் சீன துரோகிகளுடையவும் ஆட்சியின் கீழ், மேற்கூறிய பிரச்னைகளைத் தீர்த்துவைப்பதென்பது முடியவே முடியாது.

நமது சரித்திரத்தில் மிக நெருக்கடியான காலத்தை நாம் எதிர் நோக்கி நிற்கிறோம். நமது தேசத்தின் நல்வாழ்வு காப்பாற்றப்பட வேண்டுமானால், ஒவ்வொரு உண்மையான பிரஜையினுடைய உழைப்பும் பிரயத்தனமும் அவசியத்திலும் அவசியமாயிருக்கிறது. இதில் வாலிபர்கள் மும்முரமாகப் பங்கெடுத்துழைப்பார்கள். வரப்போகிற போராட்டத்தைத் தைரியமாகத் தழுவிக்கொள்வதற்கும், தாய் நாட்டை ரக்ஷிக்கும் சேவையில் சர்வதியாகம் செய்வதற்கும் நாங்கள் தயாராயிருக்கிறோம்.

# வாங். வீ. லிங்.

[இவர் ஓர் வேலையற்ற ஆசிரியர். ஆங்கிலம் அறியாதவர் "வாய்ஸ் ஆப் சைனு" என்ற ஆங்கிலப் பத்திரிகையை நண்பர் ஒருவர் படித்துக் காட்டியபொழுது அப்பத்திரிகையின் போக்கை மெச்சி அதன் மூலம் தனது கருத்தை வெளியிட்டார். இவர் கூறிய கருத்துக்களில் முக்கியமானவை.]

"ஏகாதிபத்யத்தின் ஆக்ரமிப்பை, சீன ஜனங்கள் சகித்துக்கொண்டிருக்க முடியாது. அடக்கி ஒடுக்கப்பட்டு கிடக்கும் சீனப் பொது ஜனங்களின் ஜப்பானிய எதிர்ப்பு உணர்ச்சி, தினே தினே வளர்ந்து வருகிறது. ஆனால் இந்த உண்மையை சாதாரண செய்திப் பத்திரிகைகளிலிருந்து கண்டுபிடிப்பது அசாத்தியம்.

சீனுவிலுள்ள உத்யோகஸ்தர்களில் சிலர் லஞ்சம் வாங்கிப் பிழைக்கிறவர்கள். அவர்களுக்கு ஜப்பானை எதிர்க்கக் கொஞ்சங்கூட மனமில்லை. சீன ராணுவ அதிகாரிகளுடைய ஆதிக்கத்தின் கீழ், 20 முதல் 30 லட்சம் வரை துருப்புகள் இருக்கின்றன. ஆனல் இந்த அதிகாரிகள் கல்வி வாசனையில்லாத மூடர்களாகிய போர் வீரர்களை, தாய் நாட்டைக்காக்கும் பொருட்டு உபயோகிப்பதற்குப் பதிலாக, தங்களுடைய அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உபயோகிக்கிருர்கள். சீன தேசத்து பாங்கர்கள் ஒரு வழியிலும் ஜப்பானிய விரோதிகளல்ல.

அநியாய வட்டியின் மூலம் பொதுஜனங்களைச் சுரண்டுவதி லும், ராணுவ அதிகாரிகளுக்குப் பணம் கொடுத்து உள் நாட்டுச் சச்சரவுகளைக் கிளப்பிவிட்டு, தேசாபிமான இயக்கங்களை நசுக்குவதிலும்தான் அவர்களுக்கு அக்கரை. போட்டி போட முடியாதவாறு ஜப்பான் தன்னுடைய நாட்டிலிருந்து சரக்குகளைக் கொண்டுவந்து சீனுவில் கொட்டிக் குவித்துங்கூட, சீனுவிலுள்ள சுதேசி ஆலை முதலாளிகள் ஜப்பானை எதிர்த்து நிற்கும் தைரியம் கொள்கிருர்களில்லை. அவர்கள், தங்களுடைய போக வாழ்க்கை "ஜாம் ஜாமென்று" தொடர்ந்து நடைபெறுவ தற்காக, இதுவரையில் சகோதரச் சீனர்களை சுரண்டிவந்த சுரண்டலை இன்னும் மும்முரப்படுத்தவே வழி கண்டுபிடிக் கிருர்கள்.

பொதுவாக, சிவிலியன்கள் ஜப்பானிய விரோதிகள் தான். ஆயினும் ஒருமுறை அரசாங்கமானது தயாராக்கப் பட்டுவிட்டதானுல் அப்புறம் ஜப்பானேடு யுத்தந்தான் என்று அவர்கள் துரோகிகளால் நம்பும்படி செய்யப்பட்டு ஏமாற்றப்படுகிருர்கள்.

இருந்தபோதிலும் பாட்டாளி மக்களில் பெரும் பாலோரை உடனே ஏமாற்றிவிட முடிகிறதில்லை. அவர் கள் ஜப்பானின் கடும் விரோதிகளாயிருக்கிருர்கள். ஜப்பா னிய ஆக்ரமிப்பை எதிர்த்து முறியடிக்க நமக்குப் போதிய சக்தி யிருக்கிறதென்று ஆசிரியர்களாகிய நாங்கள் நம்பு கிரும். மாணவர்கள் அத்தனைபேரும் எங்களுடைய தோழர்களே.

.................................இன்றைய நிலைமையி லிருந்து விடுபட சீனுவுக்கு ஒரே ஒரு வழிதானிருக்கிறது. அதாவது, ஜப்பானின் ஆக்ரமிப்பை எதிர்ப்பதென்றும், உடனடியாக ஜப்பான்மீது போர் தொடுப்பதென்றும் தீர்மானிப்பதுதான். இந்த நம்பிக்கையிலும் தீர்மானத்தி லும்தான் பாட்டாளிகளாகிய நாங்கள் பங்குகொண்டிருக் கிறோம். எங்களுடைய நம்பிக்கையும் தீர்மானமும் காரிய சித்தியாகும் நாள் நிச்சயமாக வரும். அந்த நாளும் தூரத்தில் இல்லை.

# தொழிலாளியின் எதிர்ப்பு.

[ஸையா ஸென் விடுதலை அறிவை (Salvation Intelligence)ச் சேர்ந்த ஒரு வாலிபப் பெண் தொழிலாளியின் அறிக்கை.]

அன்பார்ந்த தேசத்தார்களே! எங்களுடைய ஜீவிதத்தை மேலும் மேலும் கவலையும் துயரமும் அரிக்கின்றன. ஜப்பானிய ஏகாதிபத்தியம் தலைகால் தெரியாது எங்களை நசுக்குகிறது. அவர்கள் எங்களை ஆசைப்படுகிறபொழுதெல்லாம் உதைக்கிறார்கள்; அதுவும் அநேகமாக உயிர் போகும்வரையில் உதைக்கிறார்கள். முன்பெல்லாம் இந்த விஷயங்களொன்றும் எனக்குத் தெரியாது. அதிகாலையிலேயே தொழிற்சாலைக்குச்சென்று இரவுவரையில் உழைக்க வேண்டுமென்றும் கஷ்டப்பட்டு வாழ வேண்டியதுதான் எனது தலையிலெழுத்து என்றும் நினைத்துக்கொண்டிருந்தேன். விஷயம் என்னவென்று இப்பொழுது எனக்குப் புரிகிறது. ஜப்பானிய ஏகாதிபத்தியம் நம்மை ஆக்ரமிக்கிறதென்பதையும் நசுக்கி ஒடுக்குகிறதென்பதையும் நான் அறிகிறேன்.

எனது அன்புக்குரிய நண்பர்களே! நானே அனுபவித்த துயரங்களை இப்பொழுது உங்களுக்குச் சொல்கிறேன்! நான் வேலை செய்யும் தொழிற்சாலை ஜப்பானியர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. அங்கு நான் ஐந்து வருஷங்

களுக்கு மேலாகவே உழைத்தேன். முன்பு மாதந்தோறும் 20 டாலர்கள் என்றால் சம்பாதிக்க முடிந்தது இப்பொழுதோ சுமார் 12 டாலர்களே சம்பாதிக்கமுடிகிறது. எங்களுடைய அல்லல் மிகுந்த வாழ்க்கையை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. எமது ரத்தமும் வியர்வையும் எல்லாம் யந்திரங்களால் உறிஞ்சப்படுகின்றன.

ஒரு நாள் மாலையில் நான் நோய்வாய்ப் பட்டிருந்தேன். வேலைக்குப்போக முடியவில்லை. அடுத்த நாள் காலையில், என்னோடு வேலைசெய்கிற இரண்டு சகோதரிகள் என்னிடம் வந்து, என்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டதாகக் கூறினார்கள்......................மறுதினம் எனது கூலியை வாங்கிவரச் சென்றேன். ஆபீஸ் வாசலின் முன்னால் ஒரு ஜப்பானியன் என்னை நிறுத்தி, என்னவேண்டுமென்று கேட்டான். தொழிற்சாலை வாசலின் முன்னால் நின்ற ஒரு ஜப்பானியன் என்னிடம் "எங்களுடைய தொழிற்சாலையில் விலக்கப்பட்ட தொழிலாளிகளுக்குக் கூலி கொடுக்கப்படுவதில்லை" என்று சொன்னான். நான் விவாதித்தேன்: "எனது சக்தியைச் செலவழித்ததால் தானே கூலி கேட்கிறேன். அப்படியிருக்க ஏன் கொடுக்கமாட்டேனென்கிறீர்கள்" என்று கேட்டேன். அதற்குப்பதிலாக அந்த ஜப்பானியன் கையால் ஓங்கி இரண்டு உதைபோட்டான். அதைத் தொடர்ந்து எனது கூந்தலை வெடுக்கென்று பிடித்து இழுத்துக் கீழே தள்ளி "கற கற"வென்று ஆபீஸினுள் இழுத்துச்சென்றான்; அங்கு ஓர் இரும்புக் கழியால் நன்றாக மொத்தினான்.

"ஐயோ! என்னைக் காப்பாற்றுங்கள்! என்னைக் காப்பாற்றுங்கள்!" என்று மட்டுமே என்னால் கூச்சல் போட முடிந்தது. இன்று தேசத்தாரைநோக்கி நான் கதறுகிறேன். "எங்களைக் காப்பாற்றுங்கள்! எங்களைக் காப்பாற்றுங்கள்!" என்று.

# வேலை நிறுத்தக்காரர்களின் முறையீடு.

---

[பகிரங்கக் கடிதம்; தொழிலாளிகளுக்கு எழுதப்பட்டது; டாகாங் பஞ்சாலை வேலை நிறுத்தக்காரர்களின் யூனியனால்.]

" தாய்மார்களே! வாழ விரும்பாதவன் யார்?

" கூலி உயர்வதில் சந்தோஷப்படாதவன் எவன்?

" குறைந்தபக்ஷம் இடைஞ்சல்களேயுள்ள ஜீவிதத்தைப் பாராட்டாதவன் உண்டா?

" ஜனுவரி 28உ தோல்வியிலிருந்து, ஜப்பானிய முதலாளிகள், நம்மைக்கொடுமைப்படுத்துவதை தீவிரப்படுத்தியிருக்கிறார்கள். ஒன்றுக்குப் பாதியாகக்கூலி குறைக்கப்பட்டிருக்கிறது; போனஸையும் சாப்பாட்டு அலவன்ஸையும் நிறுத்திவிட்டார்கள். எங்களுடைய பெற்றோர்கள், புதல்வர்கள், புதல்விகள் யாருக்கும் ஒருவேளை உணவுகூடப் பூரணமாகக் கிடைக்கிறதில்லை. அவர்களுடைய உடைகளும் எங்களுடையவும் இத்துக் கந்தலாகிக்கொண்டிருக்கின்றன நாங்கள் என்ன செய்வோம்? எங்கள் முன்னால் ஒரே ஒரு வழிதான் தென்படுகிறது: அதிகப்படியான கூலி பெறுவது! நாட்களாகவும் வருஷங்களாகவும் கனவிலும்

நனவிலும் என்றேனுமொருநாள் கூலி உயருமென்று எதிர்பார்த்திருந்தோம்.

"ஒரு ஸெண்ட் கூலி உயர்வுகூடக் கிடைக்கவில்லை. சகோதரர்களே! சகோதரிகளே! நாங்கள் இன்னும் காத்திருப்போமா? முன்பு, சாப்பாட்டு வேளையில் ஒரு மணி நேர ஓய்வும், காலையிலும் பிற்பகலிலும் 30 நிமிஷ ஓய்வும் கிடைத்து வந்தது. இப்பொழுதோ ஓய்வு அனுமதிக்கப் படுகிறதில்லை. நாங்கள் சாப்பிடும்போதுகூட வேலை செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். சகோதர சகோதரிகளே! வண்டியிழுக்கும் மாடுகூட தீனி தின்னும்போது, வேலை செய்வதில்லை. ஜப்பானியர்கள் எங்களை மனிதர்களாக நடத்துகிறார்களா? அவர்களுடைய கண்களில் நாங்கள், சுமை தூக்கும் மிருகங்களைவிடத் தாழ்ந்தவர்களாகப்படுகிறோம். எமது உத்தம தோழன் "ஸயா நாங்கிங்" (மெய்-ஷி-சூ-யத்) என்பவன், ஜப்பானியர்களால் கொலை செய்யப்பட்டான்!.

சகோதர சகோதரிகளே! யந்திரங்களின் பக்கத்தில் சோர்ந்து விழுவதை நாங்களே பார்க்கும்வரையில் காத்திருக்கவேண்டுமா? மாட்டோம்! சௌகரியங்களடைவதற்காக நாங்கள் வேலை நிறுத்தம்செய்து தீரவேண்டும். எங்களுடைய வாழ்க்கை நிலைமைகள் சீர்திருத்தப்படாதவரையில் நாங்கள் வேலைக்குத் திரும்போம்................"

# ஞாபகார்த்தம்.

[கீழே தருவது ஒரு பகிரங்கக் கடிதம். இது பெய்ப்பிங்-தியான்ஸின் கலா ஊழியர் தேச விடுதலைச் சங்கம், பெய்ப்பிங்-தியான்ஸின் மாணவர் சங்கம், ஷான்ஸி மாகாண மாணவர் தேசீய விடுதலைச் சங்கம், பெய்ப்பிங் மாதர் தேசீய கல்விக் கழகம், வாலிப தேச விடுதலைச் சங்கம், ஆகியவற்றின் சார்பில், 1932 பிப்ரவரி 7உ கொல்லப்பட்ட தொழிலாளர்களின் ஞாபகார்த்தமாக எழுதப் பட்டது.]

“கூட்டங் கூடுவதற்கும், சங்கம் சேர்வதற்கும், வேலை நிறுத்தம்செய்வதற்கும் தங்களுக்குள்ள உரிமைகளை ஸ்தாபிப்பதற்காக, பீக்கிங்—ஹாங்கௌ ரயில்வே தொழிலாளிகள், 1923ம்வூ பிப்ரவரிமீ 7உ ஏகாதிபத்தியத்தின் ஓடுகாலி நாய்களை—ராணுவத்தார்களை எவ்வாறு எதிர்த்துப் போராடி ரத்தம் சிந்தினார்களென்பதை, நாமெல்லோரும் ஞாபகத்தில் வைத்திருக்கிறோம். இந்தச் செய்கை..............தொழிலாளி வர்க்கம் தேசீய விடுதலை இயக்கத்தில் பங்கெடுத்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டதென்பதைக் குறிப்பிடுகிறது.....................

“தேசீய விடுதலை இயக்கத்திற்குப் புத்துயிரளித்த, பெய்ப்பிங் மாணவர்களுடைய ஆர்பாட்டங்கள் டிசம்பர் 9உயன்று நடந்தது. சந்தேகமின்றி வெற்றியில் முடியப் போகும் ஓர் இயக்கத்தின் ஆரம்பம் அதுவே. இந்த இயக்கத்தின் வெற்றியின் அளவு, இயக்கம் பொதுஜனங்களிடம் பரவும் அளவையே பொறுத்திருக்கிறது..........

“பெருமை ஒளி வீசும் பிப்ரவரிமீ 7உ போராட்டத்தை நாங்கள் ஞாபகமூட்டுகிறோம். தொழிலாளர்கள் தேசீய விடுதலைப் போராட்டத்தில் மும்முரமாகப் பங்கெடுத்து உழைப்பார்களென்று நம்புகிறோம்.

# கைதியின் குரல்.

---

[ஷாங்காய் நகரிலுள்ள ஸாச்சோசின் என்ற பகுதியிலிருக்கும் 2-வது மாடல் (முன் மாதிரி) ஜெயிலிலிருந்து ஓர் அரசியல் கைதி எழுதிய கடிதம் கீழே தரப்படுகிறது.]

"நாங்கள்—அதிர்ஷ்டங்கெட்ட மனிதர்கள். சர்வசாதாரணக் கைதிகளைப்போல், மனிதத் தன்மையற்ற வகையில் காலந்தள்ள வேண்டியிருக்கிறது................. ஒரு காரணமுமின்றி சும்மா நாங்கள் உதைக்கப்படுகிறோம்.

அநேகர் இறந்துபோய்விட்டார்கள்; பலர் நோய்வாய்பட்டுக் கிடக்கிறார்கள். எங்களால் இந்த மனிதத் தன்மையற்ற வாழ்வை, இனிமேல் அரைக்கணமும் சகித்திருக்க முடியாது. வார்டன் டிங்கும் அவனைச்சேர்ந்தவர்களும் உத்யோகம் ஏற்றதிலிருந்து எங்களுக்கு தினசரி இரண்டு வேளை சாதம் மட்டும் கிடைத்துவருகிறது. ஒவ்வொரு வேளைக்கும், கட்டியாக துருப்பிடித்திருக்கிற ஒரு டின்னில், தண்ணீர், சோறு, மணல், களை விதைகள், உமி, தோல் ஆகியவை சேர்ந்த ஒரு "மிக்ஸர்" 10 அவுன்ஸ் அளவு தருகிறார்கள். அது மிக மோசமானதாயும் தின்ன முடியாததாயுமிருக்கிறது.

காய் கறிகள் எங்களுடைய சகோதரக் கைதிகளால் பயிர்செய்யப்படுகின்றன. ஆகையால், அவை, விலை கொடுத்து வாங்கவேண்டிய தேவையில்லை. ஆயினும்,

உணவுக்கான பயிர் பச்சைகள் முற்றி மரமாகப்போகிற வரையில், ஜெயிலதிகாரிகள், அவற்றை நாங்கள் தின்ன விடுவதில்லை......................

கோடைகாலம் வந்துவிட்டால், அதிகப்படியான கைதிகள் நோயாளிகளாகிவிடுகிறார்கள். நாங்கள் எவ்வளவு தாகமாயிருந்தபோதிலும் அதைப்பற்றிக் கவலையில்லை; போதுமான அளவு குடிக்கத் தண்ணீரை எதிர்பார்ப்பது நிஷ்பிரயோஜனம். ஜெயிலில் கொடுக்கப்படுகிறதோ அழுக்கான தண்ணீர்; அதுவும் காய்ச்சப்படமாட்டாது........ இப்போது ரொம்ப உஷ்ணமான காலம். எங்களுடைய திரேகங்கள் அப்பும் அழுக்கும் நிறைந்திருக்கின்றன. ஆனால் வாரக் கணக்காகின்றன. நாங்கள் குளித்து பற்பல நாட்களாக, எத்தகைய தேகாப்பியாசமுமின்றி, ஜன நெருக்கமுள்ள அறைகளில் அடைபட்டுக் கிடக்கிறோம். யமன், அனுதினமும் விஜயஞ்செய்தவண்ணமாகவே இருக்கிறான்..................நாங்கள் சீக்காளிகளாக விழுந்துவிட்டால் டாக்டரும் வரமாட்டார்; வைத்திய உதவியும் கிடையாது................

நரகத்தைவிட எங்கள் ஜெயில் இருளடைந்திருக்கிறது. நாள் முழுவதும் ஒவ்வொரு நிமிஷமும் கைதிகளை அடிக்கும் ஓசை செவியில் விழுகிறது. அநேகர் கால் கை ஒடிபட்டு அங்கயீனமடைந்திருக்கிறார்கள். கைதிகளை சாகச்சாக அடித்துக்கொல்வது இங்கு அசாதாரணமல்ல. "நாங்கள் உங்களை அடித்துக் கொன்றால் எந்தப் பிசாசுக்கும் தெரியாது" என்று அவர்கள் (ஜெயிலதிகாரிகள்) அடிக்கடி

சொல்கிறார்கள்.....................நீதியின்பொருட்டு, சித்திர வதையிலிருந்து விடுபடும்பொருட்டு, எவனேனும் தைரியத்துடன் சட்டபூர்வமாக விண்ணப்பஞ்செய்தானேயானால், அவனுக்குத்தான் முதன்முதலில் சாகச்சாக உதையும், இரண்டு கைக்கும் பளுவான விலங்குகளும் கிடைக்கிறது. நீதி பரிபாலிக்கவேண்டுமென்று மட்டும் கோரியதற்காகக் கூட, அநேகர் கடுமையாக அடிக்கப்பட்டிருக்கிறார்கள். எங்களுடைய வாழ்வு, ஒரு தூசி அளவுகூட மதிக்கப்படுகிறதில்லை.

எங்களால் எவ்வளவு பொறுக்கமுடியுமோ அதற்கு அதிகமாகவே நாங்கள் பொறுத்துவிட்டோம். சியா, யின் ஆகிய வார்டுகளிலுள்ள அரசியல், ராணுவக் கைதிகள் ஜூன் 30வ யிலிருந்து உண்ணுவிரதம் இருப்பதென்று தீர்மானித்திருக்கிறார்கள். எங்களுடைய கோரிக்கைகளாவன:— (1) சாதம் செவ்வையாகச் சமைக்கப்படவேண்டும். (2) காய்கறிகளும் நன்றாகச் சமைக்கப்படவேண்டும். சமைக்கப்படுமுன் அவைகள், சகதி, வேர், சப்புச்சவறு எதுவுமின்றி சுத்தமாக அலம்பப்படவேண்டும். மாறி மாறி, வேறு தினுசான காய்கறிகள் சமையலுக்கு அமைக்கப்படவேண்டும். (3) கைதிகளை அடிப்பது நிறுத்தப்படவேண்டும். சட்டப்படி கைதிகளுக்குப் பந்தோபஸ்து அளிக்கவேண்டும்.

எங்களுடைய கோரிக்கைகள் அங்கீகரிக்கப்படவில்லை. பதிலாக, எங்களுடைய சகோதர உண்ணுவிரதிகளில் இருவரை 'செத்த நாயை இழுப்பதுபோல்' கறகறவென்று

இழுத்துக்கொண்டுபோய், 2-வது டிவிஷன் ஆபீஸ் அறையில் போட்டு, குரூரமாகவும் கொடுமையாகவும் நையப் புடைத்தார்கள்.

இறுதிவரையில் போராடுவதென்று நாங்கள் தீர்மானித்துவிட்டோம். நாங்கள் மனிதர்கள்............... எங்களுக்குமனச்சாட்சியுண்டு. நாங்கள் ஜப்பானிய-விரோத, ஏகாதிபத்திய விரோதப் போர் வீரர்கள். நாங்கள் வாழ விரும்புகிறோம். எங்களுடைய ரத்தத்தையும் சதையையும் கொடுத்தும், வாழுவதற்குரிய உரிமையைப் பெறுவதில் வெற்றிபெறத் தீர்மானித்துவிட்டோம். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில், சமூகத்தினுடைய அனுதாபம் எங்களை நோக்கி விரிவடைந்தாலொழிய, நாங்கள் வாழ முடியுமென்ற நம்பிக்கை எங்களுக்கில்லை. நாங்கள் மீண்டும் விரோதிகளை எதிர்த்துப் போராட போர்முனையில் வந்து நிற்பதற்காக நீங்கள் அவசியம் எங்களுக்கு உதவிபுரியுங்கள். இல்லையானல், எங்களுடைய போராட்டத்தின் கடைசித் தண்டனையான மரணத்தில் நாங்கள் விழும்படி நேரிடும்.

ஸோஹோசின்னிலுள்ள 2-வது மாடல் ஜெயிலிலிருக்கும் சியா, சின் ஆகிய வார்டுகளில் வசிக்கும் அரசியல் கைதிகள் கண்ணீரோடு இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கிறோம்.

# போலீஸார் கடமை.

[ஷாங்கையிலிருக்கும் தேச விடுதலைச் சங்கத்தார் எழுதிய பகிரங்கக் கடிதம் இது.]

"செப்டம்பர் 18வ சம்பவத்தின் ஞாபகார்த்தமாக நடந்த ஐந்தாவது வருஷாந்திரக் கொண்டாட்டத்தில் பங் கெடுத்துக்கொண்ட நமது பொது ஜனங்களை நீங்கள் ஈவிரக்கமின்றி அடித்ததும் கைதி செய்ததும் பெரும் பிசகு.

போலீஸ்காரர்களாகிய உங்களில் பெரும்பாலார் எங்களைப்போல் தேசாபிமானமுடையவர்களென்று நாங்கள் நம்புகிறோம். அன்றைய ஆர்பாட்டக்காரர்களை நீங்கள் அடித்த காரணம் என்னவென்றால், உங்களுக்கு, உங்க ளுடைய மேலதிகாரிகளின் ஆணைகளைத் தட்டி நடக்கத் தைரியமில்லை...................... உங்களுடைய சொந்தச் சகோதரர்களான தேசாபிமானப் பொது ஜனங்களை நீங்கள் அடிக்கஆசைப்படமாட்டீர்களென்றுஎங்களுக்குத்தெரியும். வெளியிற்சொல்ல முடியாதபடி, உங்களுக்கு இடைஞ்சல்கள் இருக்கலாம். சில போலீஸ்காரர்கள், அன்று, அடிக்காமல் விலகிவிட்டார்களென்பதும், உங்களில் அநேகர் அந்த சம்பவத்திற்குப் பின்னால் உங்களுடைய ஆழ்ந்த வருத் தத்தைத் தெரிவித்தீர்களென்பதும் எங்களுக்குத்தெரியும்.

"எங்களை எதிர்த்துப் பிரசாரம் செய்கிறவர்கள் இந்த நாட்டில் இல்லாமலில்லை. அவர்கள் உங்களிடம் வந்து,

நாங்கள் அனுவசியமாகத் தொந்தரவு கொடுக்கிறவர்களென்றும் கலகக்காரர்களென்றும் வர்ணிக்கிறார்கள். நாங்கள் யாரோ சிலரால் உபயோகிக்கப்படுகிறோமென்றும் "சீனர்கள், சீனர்களை அடிக்கமாட்டார்களென்ற சுலோகம் கம்யூனிஸ்ட் சுலோகம் என்றும் கூறி உங்களிடம் தப்பபிப்பிராயம் கற்பிக்கிறார்கள். அவர்கள் உங்களை ஏமாற்றி விட்டார்கள்.

"................................இந்த விஷயத்தில் அடங்கியிருக்கும் உண்மைகள் சர்வ சாதாரணமானவை, விளக்கமானவை, கைப்புண்ணுக்குக் கண்ணாடியா வேண்டும் பார்க்க? நாங்கள் பிறரால் உபயோகப்படுத்தப்பட்டிருப்போமா அல்லமா என்பதை நீங்களே தெரிந்துகொள்ளக் கூடும். பொதுஜனங்களிடம் நீங்கள் கையாண்ட வன்மையான அடக்குமுறையை ஜப்பானியப் பத்திரிகைகள் வானமளாவப் புகழ்ந்திருக்கின்றன. என்பதை மட்டும் உங்கள் ஞாபகத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். இன்னும் உங்களிடம் அவசியமாகச் சொல்லவேண்டியதென்னவென்றால், நீங்கள் எதிரிகளால் உபயோகப்படுத்தப் படுகிறீர்களென்பதே. நீங்கள் எதிரிகளால் புகழப்பட விரும்புகிறீர்களா? தயவுசெய்து இதை உணருங்கள்: துரோகிகளைத்தான் எதிரிகள் புகழ்வார்கள். நீங்கள் துரோகிகளாயிருக்க மனப்பூர்வமாகப் பிரியப்படுகிறீர்களா?

"சீனர்கள் சீனர்களை அடிக்கமாட்டார்கள்" என்ற சுலோகம் தப்பிதமானதென்றால், சீனர்கள் தங்களுடைய சொந்தஜனங்களை அடிப்பதுதான்சரியா?..............தயவு

செய்து உணருங்கள். துரோகிகள்மாத்திரமே நிரபராதிக ளான சீனப் பொது ஜனங்களை உதைப்பார்கள்! இந்த சுலோகம் கம்யூனிஸ்ட்களால்உபயோகிக்கப்படுகிறதென்றே வைத்துக்கொள்வோம் அப்படியானாலும் அதில் அடங்கி யிருக்கும் உண்மையை நம்மால் அலட்சியம்செய்ய முடி யாது. கம்யூனிஸ்ட்கள் சாதம் சாப்பிடுகிறார்களென்பதற் காக நாம் சாதம் சாப்பிடாதிருப்போமா?...............

அன்புள்ள போலீஸ்காரர்களே, இப்போதைய நிலை மையை உணர்ந்து புத்தி பூர்வமாக விருந்து தீரவேண்டும்! இதற்குள்ளாகவே உங்களில் பலர், விஷயஞானத்துடன் உண்மை உணர்ச்சியுடையவர்களாகி விட்டார்களென்பதை நாங்கள் அறிவோம். உங்கள் அத்தனைபேருக்கும் மனச் சாட்சியிருக்கிறது; நீங்களெல்லோரும் தேசத்தை நேசிக் கிறீர்கள். ஆனால், தேசாபிமானமுள்ள ஜனங்களை அடிப் பதை, உங்களால் எவ்வாறு பொறுத்துக்கொண்டிருக்க முடிகிறது? ஜனங்களிடத்திலிருந்துதான் உங்களுக்குச் சம்பளம் கிடைக்கிறது. ஜனங்கள் என்ன கொடுக்கிறார்க ளோ அதைத்தான் நீங்கள் உண்ணுகிறீர்கள். ஆகவேநீங்கள் கண்டிப்பாக பொது ஜனங்களை நேசித்துக் காப்பாற்றக் கட மைப்பட்டிருக்கிறீர்கள்...............நாங்கள் உங்களுடைய இடைஞ்சலான நிலைமையைப் பாராட்டுகிறோம். உங்களு டைய இன்றையப் பதவிகளை நீங்கள் காத்துக்கொள்ள நாங் கள் உதவி புரிவதோடு, தேச விடுதலை முன்னணியில், எங் களோடு தோளோடு தோள் நின்று போராடும் சகோதரப் போர்வீரர்களாக உங்களை பாவித்து நடத்தவும் விரும்பு கிறோம்.”

# போர்வீரர் வேண்டுகோள்.

---

[நாலாவது படையின் அரசியல் பயிற்சி இலாகா, தேசம் பூராவுமுள்ள பொது ஜனங்களுக்கு விடுத்த வேண்டுகோள்.]

"தேசத்தின் பெரியோர்களே! சீனாவின் சகோதர சகோதரிகளே!!

ஜப்பானை எதிர்த்துப் போராட இப்பொழுது படைகள் செல்கின்றன......................சீனாதேசம் வாழ்வதற்காக நாம் போராடவேண்டும். அதோடு, உலகத்திலுள்ள அடிமைப்பட்டதேசங்கள் உரிமையோடும் சுயநிர்ணயத்யோடும் வாழ்வதற்காகவும் நாம் யுத்தம் புரியவேண்டும். நாம் இப்பொழுது நடத்துகிற போராட்டம், மிருக பலத்தையும் கொடுமையையும் எதிர்த்து நடத்துகிற போராட்டமாகும். இது சீன மக்களுக்கும் மனிதவர்க்கம் முழுமைக்கும் மிக அவசர அவசியமாயிருக்கிறது.

ஜப்பானிய ஏகாதிபத்யம் சைனாவின் பரம விரோதி...................சீன மக்களாகிய நாம், நமது நாட்டை அடிமைத்தனத்திலிருந்து காப்பாற்ற விரும்பினால், ஒரே ஒரு வழிதானிருக்கிறது. அதாவது, ஜப்பானிய ஏகாதிபத்யத்தை எதிர்த்துக் கடுமையாகப் போர்புரியும் பொருட்டு, ஆயுதந்தாங்கி உடனடியாக எழுவதுதான்................. சுய மதிப்போடு தன் காலில்நின்று சீனா வாழ்வதற்கு ஒரே

ஒரு மார்க்கம்...................துள்ளியெழுந்து கடும்போர் புரிவதுதான்......................

விரோதிகளின் எதிர்ப்பை மாற்றுவதற்காக உங்களுடைய நிலத்தை உபயோகப்படுத்துவது, விறகைக்கொண்டு நெருப்பை அணைப்பதுபோலாகும். அது உங்களுடைய நாசத்தை நீங்களே வரவழைப்பதற்கு ஒப்பு. ஜப்பானியத் துருப்புகள் திறமையாகத் தயாரிக்கப்பட்டிருக்கின்றன வென்றும், நம்முடைய துருப்புகளால் அவைகளுக்கு ஈடு செய்ய முடியாதென்றும் நமது நாட்டில் சிலர் நினைக்கிறார்கள். இந்த நினைப்பின் பயனாக, அவர்கள் ஜப்பானியர்களை உடனே எதிர்க்கவேண்டியதின் அவசியத்தைப் பிரசாரஞ் செய்கிறதில்லை. அதோடு அவர்கள் நம்மிடம், நமக்கு நீண்ட காலத் தயாரிப்பு வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். ஆனால் இந்த மனிதர்களுக்கு, ஜப்பான் ஒரு நவநாகரீக தேசமென்றும், இன்னும் எட்டு அல்லது பத்து வருஷங்களுக்குத் தயார் செய்தால்கூட, ராணுவத்தொழிலில்பின்தங்கியிருக்கிற நாம், அந்நாட்டோடு போட்டியிட முடியாதென்றும், தெரியாதுபோலிருக்கிறது.

மேலும், எங்களுடைய நெஞ்சை அதிகப்படியாக உடைக்கும் விஷயம் என்னவென்றால், அபிசீனியாவின் தோல்வியை, எந்தவிதமான எதிர்ப்புக்கும் விரோதமாக எடுத்துக்காட்டி எச்சரிக்கும் பேச்சுத்தான். அபிசீனியா சிறிய நிலப்பரப்புடையது, கொஞ்சமான ஜனத்தொகையுடையது, கலா ஞானத்திலும் லௌகீக நாகரீகத்திலும் மிகப் பிற்போக்கானது என்ற உண்மைகளை அவர்கள் அறி

யார்களென்றே தோன்றுகிறது....................ஆனால், சீனாவோ, தொன்மையான நாகரீகம் படைத்தது, லட்சோப லட்சம் சதுரமைல் பரப்புடையது, 47 கோடி ஜனத்தொகை யுடையது. ஜப்பான் இத்தாலியைவிடப் பலமற்றதாயிருக்கையில், சீனாவோடு அபிசீனியாவை எவ்வாறு தாரதம்மியப் படுத்த முடியும்?...........மேலும், அபிசீனியா எதிர்ப்பின் மூலம் அடிமைப்படுத்தப்படவில்லை. பராக்கிரமம் நிறைந்த எதிர்ப்பின் பின்னால் அதனைப்பிடித்தபொழுது, யுத்தத்தில் வாரியிறைத்த எண்ணற்றஉயிர்களுக்கும் அமோகமான பொருள்களுக்கும் பதிலாக இத்தாலி அடைந்த லாபமென்ன? துண்டு துக்காணிகளான மலைப்பிராந்தியங்கள் தானே? மேலோட்டத்தில் அபிசீனியா அடிமைப்படுத்தப் பட்டதுமாதிரித் தோற்றலாம். என்றாலும், அதனுடைய போர்க்குணம்வாய்ந்த எதிர்ப்பு சக்தி இன்னும் ஜீவகளையுடன் துடித்துக்கொண்டுதானிருக்கிறது. ஒரு தேசம் தனது எதிர்ப்பு சக்தியைக் காப்பாற்றிக்கொண்டிருக்கும் வரையில் தன்னை விடுதலைபெறச் செய்துகொள்வது அதற்கு அசாத்யமான காரியமல்ல. இதற்கு மாறாக, ஊக்கத்தை உறிஞ்சும் உபாயம் கையாடப்பட்டு, தேசாபிமான நடவடிக்கைகள் அமுக்கப்படுமானால், தேசம் பூராவும் சீர்குலைந்து போகும் ....................தேசீய உணர்ச்சி நாசமாக்கப்படுமானால், தேசத்தில் அப்பால், எப்படிப்பட்ட நம்பிக்கையும் ஏற்படாது...............

"சீனாவின் ஜனத்தொகை 47 கோடி. இன்றிலிருந்து நாம் ஒருவர்கொருவர் சண்டை போடுவதை நிறுத்தி எல்

லோரும் ஒன்று படுவோமேயானல்—இன்று முதல் சீனத் துருப்புகள் சீனத்துருப்புகளை எதிர்ப்பதை நிறுத்தி, உள் நாட்டு யுத்தங்களைத் தடுப்பதற்கும் பொது எதிரியோடு போர்புரிவதற்கும் முற்படுவோமானல், கிஞ்சிற்றும் சந்தேகமில்லாமல்,நாம் ஜப்பானிய ஏகாதிபத்யத்தைத் தலைகுப்புறக் கவிழ்த்திவிட முடியும்.

நாட்டின் பெரியோர்களே! சகோதர சகோதரிகளே!! நமது தேசிய நெருக்கடி மிகக் கவலைக்கிடமாயிருக்கிறது. இதிலிருந்து தப்ப வழியில்லை. ஆயுதபாணிகளாகப் போர்க் கோலம் பூணுங்கள்! தேசத்தின்பொருட்டுச் செல்லுங்கள் போர்முனைக்கு!!......................

எங்களுடைய மனச்சாட்சியால் தூண்டப்பட்டு, நாட்டு மக்களின் தேசாபிமான உத்வேகத்தால் ஆவேச மூட்டப் பட்டு, வாங்ஸீயிலுள்ள 1200000 ஜனங்களையும் ஜப்பானை எதிர்க்கும் புரட்சி யுத்தத்திற்காக ஒன்று திரட்டவும், தாய் நாட்டை ரக்ஷிக்கவுமான புனித கைங்கர்யத்தில் ஈடுபடுவதென எங்கள் படையிலுள்ள சகல உத்யோகஸ்தர்களும் போர்வீரர்களும் ஏகோபித்துத் தீர்மானித்துவிட்டோம்.

இதன்மூலம் எங்களுடைய திட்டத்தைப் பொது ஜனங்களுக்கு அறிவிக்கிறோம்.

(1) எங்கெங்கு செல்வோமோ அங்கங்கு ஜப்பானோடு கொண்டுள்ள உறவுகளையெல்லாம் ரத்துச்செய்கிறோம்.

(2) எங்களுடைய வடதிசைப் பிரயாணத்தின் ஒரு தனிப்பெருநோக்கம் ஜப்பானை யெதிர்த்துப் போராடுவதே.

நாங்கள் சகல உள்நாட்டுச் சண்டைகளையும் எதிர்க்கிறோம். சீனன் சீனனோடு முட்டிக்கொள்வதை எதிர்க்கிறோம். படைகளும் ஒன்றுக்கொன்று விரோதங் காட்டுவதை எதிர்க்கிறோம்.

(3) தேசத்தை ரக்ஷிக்கும்பொருட்டும், ஜப்பானை எதிர்த்துப்போர் புரியும் பொருட்டும் ஆயுதந்தாங்கிய ஜப்பானிய-விரோத சக்திகளத்தனையும், பொது ஜன ஜப்பானிய-விரோத சக்திகளத்தனையும் தேசீயப் புரட்சி முன்னணியில் ஐக்யமாவதை நாங்கள் வரவேற்கின்றோம்..................."

# கான்டன் கலைஞர்கள்.

---

[கான்டனில் நுண்கலைப்போதனுசாலை ஒன்றிருக்கிறது. அங்கு தேசிய விடுதலைக்கமிட்டி ஒன்று நிறுவியிருக்கிறார்கள். அந்தக்கமிட்டியார் எழுத்தாளர்களுக்கும், சங்கீத வித்வான்களுக்கும், கலைஞர்களுக்கும், சைத்ரிகர்களுக்கும், சிற்பிகளுக்கும், நாடகாசிரியர்களுக்கும், சகல கலா சங்கங்களுக்கும், அச்சுக்கூடங்களுக்கும், விடுத்த விண்ணப்பம் கீழ்க்காணுவது.]

“சீனு தேசம் நாசமாக்கப்பட்டுவருகிறது. சீனமக்களுடைய உள்நாட்டுச் சச்சரவுகள், பொருளாதாரச் சுரண்டலில் நாட்டங்கொண்டு, ராணுவத்திமிரோடு குடியேற்ற நாடுகளைத் தாக்கிக்கொண்டிருக்கும் ஏகாதிபத்யத்தாக்குதல்களுக்குத் தூண்டுகோலாயிருக்கின்றன......... ஜப்பானிய ஏகாதிபத்யம், மஞ்சூரியாவையும் வடசீனுவையும் ஆக்ரமித்துத் தீரவேண்டியது இயல்புதான். மத்திய தென் சீனத்திற்குத் தொடர்ந்து செல்வதும் சகஜமே. சீனுவின் கிராமங்களும் குக்கிராமங்களும் பரமதரித்திரத்தில் மூங்கி மூழ்கிப் பஞ்சப்பாட்டு பாடுகின்றன. இதற்குக் காரணம், ஏகாதிபத்யத்தின் நேர்முக மறைமுகச் சுரண்டல்களே. உள்நாட்டுக் குழப்பம், திருட்டுப்புரட்டு, பஞ்சப்பசி, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவை, ஏகாதிபத்யத்தின் வரப்பிரசாதங்கள்.

சகோதரக் கலைஞர்களே! ஒரு மகோன்னதமானகாலம் நம்மை எதிர்நோக்கி நிற்கிறது. நாம் அதைக்கண்டு அஞ்சவோ, மறைந்துகொள்ளவோ கூடாது. நமது தாய்நாடு உஜ்ஜீவிப்பதற்கென்று தீர்மானிக்கப்பட்ட இந்தப் புனிதமான போராட்டத்தைக்கண்டு நாம் மிரளுவதோ, தயங்கிப் பின்வாங்குவதோ அழகல்ல. இத்தகைய சரித்திர பூர்வமான சந்தர்ப்பத்தில் நாம்—கலைஞர்களும் மூளை வேலை செய்கிறவர்களுமாகிய நாம்—முன்னணியில் நின்றுதீர வேண்டுமென்று அடிக்கடி சொல்லி வந்திருக்கிறோம். இது உண்மையாயின், தேச விடுதலை இயக்கத்தில் நாமேன் குறைந்த அளவு தொண்டு செய்திருக்கிறோம்.

சகாக்களே ! மாட மாளிகை கூட கோபுரங்களில் அடைக்கலம் புகுவதற்கு இது சமயமல்ல. கலைகளின் கூட்டமே தேசத்தின் ஜீவன். கலைஞர்களே ஜீவனை நிர்மாணிக்கும் சிற்பிகள். ஒரு தேசம் கலைகளில் பிற்போக்கடைந்திருப்பது, அதன் சீர் குலைவிற்கு எடுத்துக்காட்டு.........

சீனுதேசம் தனது விதியை நிர்ணயிக்கும்மார்க்கத்தில், எப்பக்கம் போவதென்று தீர்மானிக்கவேண்டிய முச்சந்தியில் வந்து நிற்கிறது. ஐக்கிய முன்னணியாகுங்கள், கலைஞர்களே !"

# பேனுக்களே எங்கள் ஆயுதங்கள்.

[தெற்குப் புக்கியான் எழுத்தாளர் சங்கம் என ஒன்று சீனுவிலிருக்கிறது. அதன் ஆரம்ப விழாவின்போது, 63 எழுத்தாளர்கள் கையொப்பமிட்டு ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அதன் சில பகுதிகள் பின் வருமாறு]

"சீனு தேசத்தின் நெருக்கடி முடிவான நிலைமைக்கு வந்துவிட்டது. இருளடர்ந்த இரவு நம்மீது கவிகிறது. கொலைகாரன் நம்மைக் கொன்று குவிக்க வாளாயுதத்தைத் தீட்டுகிறுன். புத்தி பூர்வமாக வாழ்க்கை நடத்துகிறவர்கள், நாடிழந்து அடிமைகளாயிருக்க விரும்பாதவர்கள் அத்தனைபேரும், போர்க்குணம்வாய்ந்து எதிரியைஎதிர்க்கும் மனேபாவத்தோடு ஒன்றுபடுகிறுர்கள்.

"வாழ்வதா அல்லது சாவதா, சுதந்தரமா அல்லது அடிமைத்தனமா என்பது இந்தக் கணத்தில் தீர்மானிக்கப் படும்..................

கலா மண்டலம் மிக விரிவாயிருக்கிறது; அதில் இலக்கியம் முக்கியமான உறுப்பு. பொது ஜனங்களுக்குக் கல்வி புகட்டவும், அவர்களை ஸ்தாபன ரீதியாக்கவும் அதற்குப் பொறுப்புண்டு. உஜ்ஜீவிக்க நடைபெறும் போராட்டத்தின் முன்னணியில், இலக்கியத்திற்கு விசேஷ அலுவல் இருக்கிறது; விடுதலை இயக்கத்தில் இலக்கியத்தின் ஆயுதம் பேனுவே; எழுத்து தேசியப் பாதுகாப்பின்

தூண்; அது முன்னணிக்கும் முன்னணியில் நின்று போராடும் போர்வீரன், தேசியப் பொதுஜன விடுதலை இயக்கத்தின் வழிகாட்டி.

தெற்கே விரோதி, சீனவில் மும்முரமாயிருக்கும் தேசிய நெருக்கடியைச் சாதகமாக்கிக்கொண்டும், பொருளாதார ஆதிக்கத்தின்மீது நம்பிக்கை கொண்டும், தென் புக்கியானை இரையாக்குகிறான். அர்த்தராத்திரியில், அந்த பூதம் பொதுமக்களின் குரல்வளையைப்பிடித்து நெரிக்கிறது. பொது ஜனங்களோடு, துள்ளியெழுவதற்கும் ரத்தம் சிந்துவதற்கும் தயாராகி, கடுமையாகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். நீதிக்குப் போராடும் உணர்ச்சியுடையவர்களும், அடிமை வாழ்வை விரும்பாதவர்களுமாகிய இளம் எழுத்தாளர் எல்லோரும், பொது ஜனங்களின் கோபாவேசத்தையும் எதிர்ப்புப்போரில் அவர்கள் காட்டும் வீரப்பிரதாபங்களையும் படம்பிடிப்பதுபோல் சித்தரித்துத் தீரவேண்டும்.

................சிருஷ்டியின் பிரத்தியட்ச வாழ்க்கையை, சொந்தவாழ்வு (Personal life) என்கின்ற குண்டுசட்டிக்குள் கட்டுப்படுத்த முடியாது. குறிப்பாக இந்நேரத்தில் நாம், தேசிய ஒற்றுமையைப் பாதுகாப்பதற்காகவும், சுயேச்சையான அரசியலைப் பெறுவதற்காகவும், தேசத்தின் விடுதலையை அடைவதற்காகவும், பேனுக்களை நமது ஆயுதங்களாக உபயோகித்துத் தீரவேண்டும்.................

தேற்கு புக்கியானிலுள்ள வாலிப எழுத்தாளர்களே! நாங்கள் உற்சாகத்துடன் இரண்டு கைகளையும் நீட்டி உங்களை அழைக்கிறோம். வாருங்கள்! சீன தேசத்தின் விடுதலைப்போராட்டத்தின் முன்னணியில்நமது பேனுக்களை ஏகாக்கிரப்படுத்துவோம்''

# பெண்களுக்கு அழைப்பு

[ஷான்ஸியிலுள்ள தேசீய மாதர் சங்கத்தாரின் அறிக்கை]

...............எங்கெங்கு எதிரிகளின் கைகள் எட்டுகின்றனவோ, அங்கங்கு, நமது ஜனங்கள், கொள்ளை, பலாத்காரம், துன்புறுத்தல் ஆகியவற்றால் துக்கக் கடலில் விழுந்து தவிக்கிறார்கள். நமது ஜனங்கள் ஆறாத்துயரத்தால் ஒப்பாரிவைப்பதையும், வீராவேசத்துடன் யுத்த முழக்கம்செய்வதையும் நாங்கள் கேட்டிருக்கிறோம்.

தேசத்தைப் பாதுகாப்பதிலும், சுதந்திரத்திற்காகப் போராடுவதிலும் பெண் மக்களாகிய எங்களுக்குப் பொறுப்புண்டு. தேச விடுதலை சங்கத்தின் ஆரம்பவிழாவானது ஷான்ஸி, ஸுயியான் ஆகியவிடங்களில் அதிகாரிகள், விரோதிகளோடு போராடுவதில் பொது ஜனங்களோடு ஒத்துழைக்க ஆரம்பித்துவிட்டார்களென்பதைக் காட்டுகிறது. ஷான்ஸியும், ஸுயியானும் நமக்குச் சொந்தமானவை. அவைகளைக் காப்பாற்றுவது நமது வாழ்வைக் காப்பாற்றுவதாகும்...............ஆம்! தேச விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகள் (vanguards) நாம் சீனா தேசத்தின் மாட்சிமைதங்கிய சரித்திரத்தை நமது ரத்தத்தால் எழுதுவோம்.

அன்பார்ந்த சகோதரிகளே! பீரங்கி ஓசை நம்மைக் கனவிலிருந்து எழுப்பிவிட்டன. பிரபுத்துவமுறை (Fueda-lism) ஏகாதிபத்யம் என்கின்ற இரண்டு நுகத்தடிகளின்கீழ் நாம் அடிமைகளாய்க் கிடக்கின்றோம். ஆயிரக்கணக்கான வருஷங்களாக நமது துயரம் நிறைந்த வாழ்வு, நம்மை அறிவிலிகளாக அடித்துவிட்டது. கொதித்துக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் நாம் நமது கட்டுகளைச் சுக்கு நூறாக உடைத்தெறிந்து தீரவேண்டும்............... தேசிய நெருக்கடியின் முன்னிலையில் நீங்கள் உங்களைத் துச்சமானவர்களாக, அலட்சியப்படுத்தத் தக்கவர்களாக நினைக்கிறீர்களா? வெற்றிக்குக் கொண்டுசெல்லும் சங்கிலித் தொடரில் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வளையமாக இருக்கிறோம். அடக்கி ஒடுக்கப்பட்ட பெண்களே எழுங்கள்! நாம் தேசத்தின் சுதந்திரத்தை ஜயித்து சாவை யெதிர்த்துப் போராடுவோமாக. அப்பால மாத்திரமே நாம் சுதந்திரத்தையும் ஜோதியையும் அனுபவிக்க முடியும்.''

---

# ஸ்தாபனம் வேண்டும்.

[அகில சீன மாணவ தேசிய விடுதலைச் சங்கத்தின் ஸ்தாபன அமைப்புக் கமிட்டியார் சீனதேச மாணவர்கள் எல்லோருக்கும் விடுத்துள்ள பகிரங்கக் கடிதம்.]

“ நமது தாய் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிற இழிவையும் மானக்கேட்டையும் நம்மால் சகிக்கமுடியாத காரணத்தாலும், துயரத்திலிருந்தும் அவமானத்திலிருந்தும் நமது தாய்நாடு விடுதலை பெறவேண்டுமென்று நாம் ஆசைபடுகிற காரணத்தாலும் சகலவிதமான அடக்குமுறைகளுக்கும் சித்திரவதைகளுக்கும் தலைகொடுத்து நாம் நமது போராட்டத்தைக் கடந்த நான்கு மாதங்களாக நடத்திவந்திருக்கிறோம். நாம் வாளாயுதங்களுக்கோ, துப்பாக்கிகளுக்கோ சிறைச்சாலைகளுக்கோ அஞ்சவில்லை. அடக்குமுறைகளுக்கோ அழிவுகளுக்கோ நாங்கள் பயப்படவில்லை. நாங்கள் தேசம் விடுதலைபெறவும், பொது ஜனங்கள் உஜ்ஜீவிக்கவும் போராடுகிறோம். எங்களுடைய தைரியத்தைக் கண்டு நாங்கள் பெருமையடைகிறோம். எங்களுடைய பிரயத்தனங்கள் அழிக்கமுடியாதவை, சாஸ்வதமானவை.

சந்தேகமின்றி கடந்த நான்கு மாதங்களில் நமது விடுதலை இயக்கம் விரிவான வெற்றி அடைந்திருக்கிறது. தனித் தனியாக ஆராய்ந்து பார்த்தால், ஒவ்வொரு ஜில்லாவிலும் நமது வேலை வெகு ஜோராகவும் மெச்சத் தக்கவிதமாகவும் நடந்திருப்பதைக் காணலாம். ஆனால் மொத்தமாகப்

பார்த்தால், பல குறைபாடுகளிருக்கின்றன. அவையாவன: (1) ஊர்வலத்தில் ஒருமைப்பாடு இல்லை; சுலோகங்களும் திட்டங்களும் ஒருமாதிரியாக இல்லை. (2) வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு விதமான (சமமாயில்லாத) அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. (3) உற்சாகமும் உத்வேகமும் சிந்தனு சக்தியை மிஞ்சுகின்றன; கவனம் நிறைந்த உபாயங்களைக் (Carefultactics)கையாடுவதைவிட வீரப்பிரதாபத்தோடு ஒரேயடியாகச் செய்யும் துணிச்சலே (brave adventurism) அதிகப்பட்டிருக்கிறது.

சகோதர மாணவர்களே! நம்மீது எதிரிகளுக்குள்ள ஆதிக்கம் தினே தினே இறுகி வருகிறது; நாமும் நமது போர்த்திறமையை வரவர வலுப்படுத்தவேண்டியது மிக அவசியம்....................இதற்காக நாம் ஸ்தாபனங்களை நிறுவவேண்டும்; ஒழுங்குபடுத்தபட்ட ஓர் திட்டத்தின் மூலம் எல்லோரும் ஒன்றுபடவேண்டும். நமது நடவடிக்கைகளெல்லாம், யாவரும் ஒத்துக்கொள்கிற ஓர் தலைமையின்கீழும், பொதுவான லட்சியத்தோடும், நடைபெற்றுத் தீரவேண்டும். இவ்வாறு நமது சக்திகள், சிந்திச்சிதறிப் போவதைத்தடுத்து, ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒன்றுபட்டு உழைக்க முற்படவேண்டும். ஒரு சிறிய உறுப்புக்கு ஏற்படுகிற லாப நஷ்டம் தேக முழுமைக்கும் பொதுவாகும். ஏதேனும் ஒருஜில்லா ஆடக்குமுறையால் கஷ்டப்படுமானல் தேசம் முழுதும் அதனுடைய ஒத்தாசைக்காக ஓடிவந்து தீரவேண்டும். நம்மைப் பிரித்துப் பிரித்துத் தோற்கடிக்க எதிரி செய்யும் முயற்சியின்வாயில் மண்ணை வாரிப்போடவும், நமது முன்னணியை ஒருமுகப்படுத்தவும், நம்முடைய சக்திகளையெல்லாம் வலுப்படுத்தவும் இதுதான்வழி.

இந்த அவசியத்தை அஸ்திவாரமாகக்கொண்டு, அகில சீன மாணவ தேசீய விடுதலை சங்கத்தை, தேசம் பூராவுமுள்ள மாணவர் விடுதலைச் சங்கங்களையெல்லாம் ஒன்று படுத்தும் காரியத்திற்காக உயர்த்தியிருக்கிறது.

சீனதேசம் பூராவுமுள்ள மாணவர்களே, எழுங்கள்! உங்களில் யாருக்கு சுயாட்சி சங்கங்களில்லையோ அவர்கள் அவற்றை நிறுவுங்கள். உங்களில் எவர்களுக்கு தேசீய விடுதலைச் சங்கங்களில்லையோ அத்தகையவர்கள் அவற்றை அமையுங்கள். சகல மாணுக்கர்களுக்கும் ஸ்தாபனம் காணுவது அசாத்தியமென்றால், யார் யார் அடிமைகளாயிருக்க விரும்பவில்லையோ அவர்களுக்காகவேனும் சங்கத்தை சிருஷ்டியுங்கள். இப்படி அமைக்கும் ஸ்தாபனங்களில் துரோகிகள் நுழைந்துவிடாதவாறு ஜாக்கிரதையாயிருக்கவும். உங்களுக்குத் துரோகம் செய்யாதவர்களையும், உங்களுக்கு உண்மையான பிரதிநிதித்வமுடையவர்களையும் நிர்வாகஸ்தர்களாகத் தேர்ந்தெடுங்கள்.

சகோதரமாணவர்களே! உறுதியுடன் இந்தக் கடமைகளைக் கடைப்பிடியுங்கள்.........அதிர்ஷ்ட வசத்தால் தற்காலச் சீனாவில் நாம் பிறந்திருக்கிறோம். ஏனென்றால், அகில உலகத்தின் தலைவிதியையும் நிர்ணயிக்கும் பொறுப்பு நம்முடையதாயிருக்கிறது. முன்னால் பாருங்கள்! கிழக்கில், மிகப் பழமையான நாடு, புத்துயிர் பெற்று, பெருமை வாய்ந்த சுதந்தரத்தை அடையும்பொழுது, மனிதவர்க்கத்தின் உதயகாலமும் தோன்றும்.



S. THANGAVEL PILLAI,
PROPRIETOR.

# இந்தியாவிலேயே

# 6,00,000,00

## ஆறுகோடி

## மக்களுக்குமேல்

### அனுபவித்து ஆதரவைப்பெற்றது

### மதராஸ்

# எஸ். டி. ஷண்முகம் கம்பெனி

# பட்டணம் பொடி.

இவை: உயர்தர புகையிலையினால் சுத்தமான நெய்யில் மிக்க அனுபவமும் திறமையும் உள்ள தொழிலாளர்களால் தயாரிக்கப்படுகிறது. மாதம் மூன்றானாலும் அதன் காரம், மணம், குணம் குன்றாதது. இத்தகைய சிறப்பினால் இப்பொடியை ஒருமுறை உபயோகித்தவர்கள் வேறு பொடியை விரும்புவதில்லை. பரீக்ஷித்து உண்மையறியுங்கள்!

இருளை நீக்குவது சூரிய ஒழி - சோம்பலை நீக்குவது எஸ். டி. ஷண்முகம் பட்டணம் பொடி என்பது உண்மையில் பொருத்தமுடையது.

மற்ற போலிகளைக்கண்டு இன்னமும் எமாறாதீர்கள்.

**ஏஜண்டு இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.**

தபால் பெட்டி நிர். 1153, வண்ணாரப்பேட்டை மதறஸ்.